**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.106/2017**

**வா.சா.1 – ஷாஜஹான்**

**நாள்.07-03-2023**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் பிரதிவாதியின் உடன் பிறந்த சகோதரர் என்று சொன்னால் சரிதான். நான் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வாதி வசந்தாவை எனக்கு 20 வருடங்களாக தெரியும். வசந்தா இந்தியன் வங்கியில் வேலை பார்த்து வந்தார். வசந்தாவுக்கு நிரந்தர இருப்பிடம் மதுரை. வாசாஆ.1 ஒப்பந்தம் ஏற்படும் காலத்தில் வசந்தா பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். வழக்குரை, எதிர் வழக்குரை, வாதியின் தரப்பில் அனுப்பப்பட்ட வழக்கறிஞரின் அறிவிப்பு, பிரதிவாதியின் தரப்பில் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பு ஆகிய விபரங்கள் எனக்கு தெரியும். என்னுடைய முதல் விசாரணையில் சொத்து சம்மந்தமாக கிரையம் பேசும் பொழுதும் சொத்தை காண்பிக்கும் பொழுதும் நான் உடன் இருந்தாக சொல்லியுள்ளேன். அந்த விபரம் வாதி தாக்கல் செய்த வழக்குரை மற்றும் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதியின் தரப்பில் அனுப்பப்பட்ட அறிவிப்பிலும் சொல்லப்பட்டுள்ளதா என்று கேட்டால் செல்லப்பட்டுள்ளது. வசந்தா எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். வாதி வசந்தா மதுரையில் வசித்து வருகிறார். பிரதிவாதிக்கு தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்களும் நத்தத்தில் உள்ளது. தாவா சொத்தின் மதிப்பு இன்றைய தேதியில் ரூ.50 லட்சம் பெறும். முன்பணம் வங்கி பரிமாற்றம் மூலம் செலுத்தப்படவில்லை. வசந்தாவிற்கு வருமான வரி கணக்கு உள்ளது. வசந்தா செலுத்திய முன்பணம் விபரம் பற்றி அவருடைய வருமானவரி கணக்கில் சொல்லப்பட்டதா என்ற விபரம் எனக்கு தெரியாது. வசந்தா 2011 ம் வருடம் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். மற்றபடி அவர் பணி ஓய்வு பெற்ற தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒப்பந்ததேதியில் வசந்தாவிற்கு ரூ.10 லட்சம் இருந்தது என்பதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஒரு ஆவணத்தை எழுதும் நபர் ஆவணம் எழுதி முடித்த பிறகு எழுதியதும், சாட்சியமாக என எழுதி கையெழுத்து போடவேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும். வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாசாஆ.1 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம். அந்த ஆவணம் பிரதிவாதியால் தயாரிக்கப்பட்டது ஆகும். அவர் எங்கு வைத்து தயார் செய்துவந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. ஆவணத்தில் எழுதியதும், சாட்சியமாகவும் என குறிப்பிட்டு கையெப்பம் எதுவும் இடம்பெறவில்லை. பத்திரம் எழுதுவதற்கான முத்திரை தாளை பிரதிவாதி மதுரையில் வாங்கினார். பிரதிவாதி நத்தம் தாலுகாவில் வசித்து வருகிறார்.

வாசாஆ.1 ஏற்படும் காலத்திற்கு முன்பு மற்றும் பின்பு சொத்தில் வில்லகம் எதுவும் ஏற்படுத்தவில்லை. வாசாஆ.1ல் பாட்ஷா சாட்சி கையெப்பம் போட்டுள்ளார். மேற்படி பாட்ஷா என்னுடைய சித்தப்பா. நானும் வாசாஆ.1ல் சாட்சி கையெப்பம்போட்டுள்ளேன். வசந்தா அனுப்பிய அறிவிப்பில் நானும், பாட்ஷாவும் கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையெப்பம் போட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை. வழக்குரையில் கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிரையபத்திரம் எழுதி தரவேண்டும் என்ற பரிகாரமும், மாற்று பரிகாரமாக கிரைய முன்பணத்தை வட்டியுடன் திரும்ப செலுத்த வேண்டும் எனவும், கோரப்பட்டுள்ளது. வாசாஆ.2 அறிவிப்புக்கு பிரதிவாதியின் தரப்பில் வாசாஆ.4ன்படி பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. பதில் அறிவிப்பில் கடனுக்காக பூர்த்தி செய்யப்படாத ஆவணத்தில் பிரதிவாதி கையெழுத்துபோட்டு கொடுத்ததாக சொல்லியுள்ளார் அந்த விபரம் தவறு. வாசாஆ.4 பதில் அறிவிற்கு வாதியின் தரப்பில் மறுப்பு பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. கிரையம் முடிக்க 3 வருட காலம் அவகாசம் கொடுக்கப்பட்டது. 3 வருட காலத்திற்குள் கிரையம் ஒப்பந்தத்தின்படி விருப்பமாகவும், தயாராகவும் வாதி இருந்தார் என்பதை எடுத்துரைக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. சட்டப்படி நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட 3 வருட காலம் கழித்து 1 1/2 வருடம் கடந்த பிறகுதான் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கும் பிரதிவாதிக்கும் மற்றும் பாட்ஷாவிற்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். நானும் பாட்ஷாவும் பிரதிவாதியை மிரட்டியது சம்மந்தமாக நத்தம் காவல்நிலையத்தில் குற்ற எண். 81/2017 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கிற்கும் இந்த அசல் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அந்த முதல் தகவல் அறிக்கையின் நகல் பிசாஆ.1. குற்றப்பத்திரிக்கையின் நகல் பி.சா.ஆ.2. நான் பிரதிவாதிக்கு எதிராக சர்வே நம்பர் 299/1A 11 சம்மந்தமாக அசல் வழக்கு தாக்கல் செய்தேன். அதேபோல் பிரதிவாதி என் மீது அசல் வழக்கு எண். 72/2018 என்ற வழக்கை நத்தம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அந்த வழக்கு திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 450/2022 என வழக்கு நிலுவையில் உள்ளது. அந்த வழக்கிற்கும் இந்த அசல் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. எனக்கும் பிரதிவாதிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் இந்த வழக்கில் வசந்தாவிற்காக நான் சாட்சியம் அளிக்க விருப்பம் இல்லை என்று தெரிவிக்கவில்லை. எனக்கும் பிரதிவாதிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்ட பிறகு வாசாஆ.5 ஆவணம் ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே கிரைய ஒப்பந்தம் ஏற்படவில்லை எனவும், கிரைய முன்பணம் எதுவும் வாதி தரவில்லை எனவும், எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே

உள்ள முன் விரோதத்தின் காரணமாக வாதிக்கு அனுசர்னையாக வழக்கில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி சாட்சியம் அளித்தால் அவருக்கு விரோதம் ஆகிவிடும் என்பதானால் நான் வாதிக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ.1 ஆவணம் கடனுக்காக எழுதி கொடுக்கப்பட்டது எனவும், வாதி கிரையம் பெற எப்பொழும் தயாராக இல்லை என்று சொன்னால் சரியல்ல. கிரையம் பாக்கி தொகை ரூ.20 லட்சத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்படவில்லை. வாசாஆ.1 மற்றும் 5 வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2023.03.08 18:18:29 +0530

Additional District Judge,

Dindigul.